IITA

# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2021/2022 - பிரான்சு

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஐந்து

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்: ......................

**பகுதி 1 இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
**பகுதி 11 இல் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கீறிட்ட இடங்களிற்கு பொருத்தமான விடையை எழுதுக.

1. பரத நாட்டிய கச்சேரி உருப்படிகளில் சிகரம் போன்று அமைவது ______________________ ஆகும்.

2. இயலிசை வாரிதி என்று அழைக்கப்படும் வாக்கேயகாரரின் பெயர் ______________________ ஆகும்.

3. கருணா ரஸத்தினுடைய ஸ்தாயிபாவம் ______________________ ஆகும்.

4. நாயக நாயகியின் பிரிவுத்துயரை வெளிப்படுத்துவது ______________________ சிருங்காரம் ஆகும்.

5. அஷ்டபதி என்னும் உருப்படியை ______________________ இயற்றியுள்ளார்.

6. பதவர்ணத்தின் பூர்வாங்கப்பகுதி ______________________ காலத்தில் அமைந்துள்ளது.

7. வேடிக்கையாக பேசுவதில் வல்லவரான தூதர் ______________________ ஆவார்.

8. |7|7 O O இவ் அடையாளம் குறிக்கும் தாளம் ______________________ ஆகும்.

9. தந்திரமும், வஞ்சகமும் கொண்ட நாயகன் ______________________ ஆவார்.

10. கணவனால் ஏமாற்றப்பட்ட அஷ்டவிதநாயகிகளில் ஒருவர் ______________________ ஆவார்.

(ம.ப.பா)

11. பதி, உபபதி, வைசிகன் ஆகியோர் ______________________________ நாயகர்கள் ஆவார்.

12. திஸ்ரகதியில் அமைந்த மிஸ்ரஜாதி ஜம்பைதாளத்தின் எண்ணிக்கை ____________________ ஆகும்.

13. சந்திப்புக்களை ஏற்படுத்துவதிலும், கொடுக்கப்பட்ட வேலைகளை திறம்படச் செய்வதிலும் தேர்ச்சி பெற்றவன் ______________________________ ஆவார்.

14. ஒரு ரஸம் தோன்றிய பின்னர், அதனால் ஒருவரிடம் ஏற்படும் மாறுதல்கள் ______________________________ எனப்படும்.

15. புன்னகை செய்வதைக் குறிக்கும் ஹாஸ்யத்தின் பிரிவு ______________________________ ஆகும்.

16. மன்மதனை தேவதையாகக் கொண்ட ரஸம் ______________________________ ஆகும்.

17. இடி, மின்னல், பூகம்பம், எரிமலை ஆகியவற்றின் நிகழ்வுகளால் உண்டாகும் ரஸம் ______________________________ ஆகும்.

18. கர்வம், தற்புகழ்ச்சி, கோபம் ஆகிய குணங்களை உடைய நாயகன் ______________________________ ஆவார்.

19. ஒருவரை ஒருவர் முன்பு நேரில் காணாமல் காதலிப்பது ________________________ ஆகும்.

20. ரஸ வெளிப்பாட்டில் ஆரம்பம் முதல் இறுதிவரை நிலைத்து நிற்கும் அடிப்படை உணர்வு ______________________________ ஆகும்.

(20x1=20 புள்ளிகள்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2021/2022 - பிரான்சு

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஐந்து

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி இரண்டு

சுட்டெண்: .......................

**முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நீர் விரும்பும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அ. நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், சாகித்யகர்த்தா, நடன அமைப்பாளர் நாயகி போன்றவர்களைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

   ஆ. பதவர்ணத்தில் இடம்பெறும் பகுதிகளையும், அதன் உட்பிரிவுகளையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

   இ. மேற்குறிப்பிட்ட பதவர்ணத்தின் திரிகால தீர்மானத்தையும், 1வது சரணஸ்வரக் கோர்வைகளையும் தாள அங்க அறுதிக்குறியீட்டில் எழுதுக. (10 புள்ளிகள்)

2. வீர ரஸத்தினையும் அதன் பிரிவுகளையும் விளக்கி, அதன் எதிர் ரஸத்தின் ஸ்தாயிபாவம், நிறம், தேவதை, விபாவம் என்பவற்றை குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

3. சிறுகுறிப்பு எழுதுக.

   அ. திரோதாத்தன் ஆ. வைசிகன்

   இ. ஸ்தாயிபாவம் (15 புள்ளிகள்)

4. நாயகப் பிரகரணத்தை விளக்குக. (15 புள்ளிகள்)

5. அ. சிருங்கார நாயகிகளை குறிப்பிட்டு விளக்குக.

   ஆ. நாயகியின் தோழிகளை வகைப்படுத்தி, அவர்களின் குணஇயல்புகளை விளக்குக. (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

6. அ. ஸ்ப்த தாளங்கள் 35 தாளங்களாக மாறுவதற்குக் காரணமாக அமையும் அங்கம் எது?

ஆ. துருதம் எனும் அங்கம் இடம்பெறாத தாளம் எது? மூன்று அங்கங்களும் இடம்பெறும் தாளம் எது?

இ. மட்டியதாளத்தின் ஜாதி, கதி மாற்றங்களை அட்டவணைப்படுத்துக. (15 புள்ளிகள்)

7. ஈழத்து கலைஞர் ப்ரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள், நடனக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை தொகுத்து எழுதுக. (15 புள்ளிகள்)